1974 மார்ச் 26]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) இக்கோயிலுக்கு ஓர் அரிசன அறங்காவலர் உட்பட ஐவர் அறங்காவலர்களாக இருந்தனர். இவர்களில் நால்வரின் பதவிக் காலம் முடிவுற்றதால், தற்போது ஒருவர் மட்டும் அரிசன வகுப்பைச் சேராதவர் அறங்காவலராக இருக்கிறார். காலியாக உள்ள பதவிகளை நிரப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்போது அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவரை அறங்காவலராக நியமிப்பது பற்றியும் கவனிக்கப்படும்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, அறங்காவலர்களின் பதவிக்காலம் முன்பு ஐந்தாண்டுக்காலமாக இருந்தது. இப்பொழுது அதை மூன்றாண்டுகள் என்று குறைத்ததற்குக் காரணம் என்ன? மீண்டும் ஐந்தாண்டுகள் என்று ஆக்குவதற்கு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மூன்றாண்டுக்காலத்திலே சிறந்த முறையிலே பணியாற்றலாம் என்ற நோக்கத்தில்தான் அப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. அது மூன்றாண்டுகள் என்று தொடர்ந்து இருப்பதற்குத்தான் அரசு விரும்புகிறது.

Coolers for sale of milk

*610 THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Dairy Development Corporation has drawn up a scheme in recent times to provide Milk Coolers on hire purchase to private persons for the sale of its milk and milk products in Madras; and

(b) if so, the details of the scheme?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) செய்தித்தாள்களில் சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டது. ஒரு சிலரே இதற்குப் பதில் அனுப்பினர். மேற்கொண்டு ஆய்வு செய்த பிறகு இத்திட்டம் கைவிடப்பட்டது. வசதியுள்ள இடங்களில் பொதுமக்களுக்கு பால், பால்பொருட்களை விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு பால்வள நிறுவனத்துறை மூலமாக குளிர் சாதனக் கருவிகளை ஏற்படுத்தியுள்ளது.

[1974 மார்ச் 26

திரு. என். கே. பழனிசாமி : சார், தனிப்பட்டவர்களிடத்தில் விற்பனைக்கு விடுவதால் 1 ரூபாய் 20 காசு, 1 ரூபாய் 30 காசு என்று வாங்கப்படுவதால், அதிகப்படியாக விற்றால்தான் கட்டுப்படியாகும். எனவே, சர்க்காரே எடுத்து, அம்பத்தூர் போன்ற இடங்களில் பால் உற்பத்தி ஸ்தாபனம் ஏற்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. மூன்று விதமான பால் இருக்கிறது, ஆர்டினரி மில்க், டபிள் டோன்ட் மில்க், டோன்ட் மில்க் என்று இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, சுகாதார முறையிலே நல்ல பாலை ஜனங்களுக்கு விநியோகிக்கும் முறையிலே அம்பத்தூர் திட்டம் முதலியவற்றில் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தனியாரிடம் கொடுத்து விநியோகம் செய்வது என்ற திட்டம் ஏற்கெனவே கைவிடப்பட்டது. தனியாரிடத்தில் கொடுக்கிற நேரத்தில் கலப்படம் செய்வதை கண்டுபிடிப்பது கஷ்டம். இரண்டாவது நாம் முடிவு செய்கின்ற விலைக்கு விற்பார்கள் என்று சொல்ல முடியாது. அதிகமான விலைக்கு விற்பார்கள். கெட்டுப் போன பாலை என்ன செய்வது என்ற திகைப்பு வேறு அவர்களுக்கு ஏற்படும். இப்படி பல்வேறு பிரச்னைகள் இருப்பதால் தமிழ்நாடு பால்வள வாரியத்தின் மூலமாக ஆங்காங்கே குளிர் சாதன கருவிகளை வைத்து இன்றைக்கு நகரங்களில் பல இடங்களில் கொடுத்து வருகிறோம்.

அதேமாதிரி அம்பத்தூரிலும் வைக்க வேண்டும் என்று கோரிக்கை வந்திருக்கிறது. இரண்டாவது பால் பண்ணை வேலை முடிந்தவுடன் இதையும் அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]